உங்களுடைய மாவட்டத்திற்குத்தான் மீன் வளத் துறை மூலமாக அதிக அளவில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, அதிகபட்சமாக 40 சதவீதம் அளவிற்கு, முழுமையான அளவுக்குச் செலவிடப்பட்டிருக்கின்றது. அதிகமான அளவிற்கு மீனவர்கள், மீன்பிடிக் கலன்கள் உள்ள மாவட்டம் அது என்பதை அரசு நன்கறியும். அந்த அடிப்படையில்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட அந்த மாவட்டத்திற்கு வரும்போது, கடலரிப்பினைத் தடுத்திடும் வகையில், தூண்டில் வளைவுகளை அமைக்க வேண்டுமென்று சொல்லி, சுமார் 116 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள்.

அந்த அடிப்படையில், 72 கிலோ மீட்டர் நீளக் கடற்கரையைக் கொண்ட அந்த மாவட்டம், ஒவ்வொரு கிலோ மீட்டர் தூரத்திற்கும், ஒரு மீனவ கிராமத்தைக் கொண்டுள்ள நிலையில், கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை ஓரங்களைத் தாக்கிய 'ஒகி' புயல் மற்றும் சமீபத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால், வள்ளவிளை, மார்த்தாண்டந்துறை மற்றும் நீரோடி கிராமங்களில் மீனவர்களின் வீடுகளும், உடைமைகளும் பலத்த சேதமடைந்துள்ள நிலையில், அம்மீனவர்களின் இருப்பிடம் மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்களை ஆபத்தான அலைகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் வகையில், மேற்படி மூன்று மீனவ கிராமங்களில் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில், குறைந்த நீளமுள்ள தூண்டில் வளைவுச் சுவர்கள் அமைக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதுகூட இந்த ஆண்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

16—

சட்டக் கல்லூரி

***35820—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2019 ஜனவரி 5]

(அ) பட்டுக்கோட்டையில் சட்டக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலே புதிதாக சட்டக் கல்லூரி திறக்கின்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

திரு. C.V. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, ஏற்கெனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சட்டக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற கொள்கை முடிவை எடுத்திருக்கிறது. அந்த வகையிலே, தஞ்சை மாவட்டத்தில் இதுவரை அரசு சட்டக் கல்லூரி ஏதும் திறக்கப்படவில்லை. அதை பட்டுக்கோட்டையிலே அமைத்துத் தந்தால் அந்தப் பகுதி மாணவர்கள் பயன்பெறுவார்கள். தேவையான இடமும் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்யும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தற்போது 11 அரசு சட்டக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்த அரசும் செய்யாத அளவிற்கு ஒரே ஆண்டிலே 3 சட்டக் கல்லூரிகளுக்கு அனுமதி அளித்து, தற்போது அந்த 3 சட்டக் கல்லூரிகளும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத்*

தட்டும் ஒலி) புதிதாக சட்டக் கல்லூரி திறப்பதைப் பொறுத்தவரை, இதற்கு முன்பு தனியார் சட்டக் கல்லூரிகளை அனுமதிப்பதில்லை என்ற ஒரு நிலைப்பாட்டில் அம்மாவினுடைய அரசு இருந்தது தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், எந்தெந்த மாவட்டங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் இல்லையோ அந்த மாவட்டங்களிலே தனியார் சட்டக் கல்லூரிகளைத் தொடங்கலாம் என்று சட்டத்திலே திருத்தம் செய்ததன் விளைவாக, இப்போது அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. உங்கள் மாவட்டத்திலே யாராவது தனியார் சட்டக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு முன்வந்தால், கண்டிப்பாக அது அரசால் பரிசீலனை செய்யப்படும். அரசின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, வருகின்ற நிதியாண்டுகளிலே அது ஆராயப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

திரு. C.V. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. பட்டுக்கோட்டையிலே தற்போது இயங்கி வரும் கிளைச் சிறைச்சாலை பிரதான வீதியிலே அதுவும் G.H. மற்றும் Bus stand–க்கு பக்கத்தில் மக்கள் அதிகம் கூடுகின்ற இடத்திலே இருந்து வருவதால், இப்போது அந்த G.H.–க்கு இடமும் நெருக்கடியாக இருப்பதால் அந்த இடத்தை அரசு மருத்துவமனைக்கு வழங்கி, வேறு இடத்திற்கு அந்த கிளைச் சிறைச்சாலையை மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டுக்கோட்டை நகர மையப் பகுதியில் அமைந்திருக்கின்ற கிளைச் சிறைச்சாலையை ஊருக்கு வெளியிலே மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார். பொதுவாகவே, அன்றைய காலத்திலே அமைந்திருக்கின்ற கிளைச் சிறைகள், தாலுகா*

2019 ஜனவரி 5]

அலுவலகத்தோடு ஒட்டி அமைந்திருக்கின்றன. திண்டிவனம் நகரத்திலும் அப்படித்தான் நகரத்தின் மத்தியிலே கிளைச் சிறையும், தாலுகா அலுவலகமும் அமைந்திருக்கிறது. பல்வேறு இடங்களிலே அப்படி அமைந்திருக்கின்ற அந்தக் கிளைச் சிறைகளையெல்லாம் துறையின் மூலமாகக் கணக்கெடுக்கச் சொல்லி, ஆய்வு செய்யச் சொல்லி அப்படிப்பட்ட கிளைச் சிறைகளையெல்லாம் ஊருக்கு வெளியிலே கொண்டு செல்வதனால் அந்தக் கிளைச் சிறையையும் விஸ்தீரணமாகக் கட்டுவதற்கும் வசதியாக இருக்கும். நகரத்தின் மையப் பகுதியில் இருக்கின்ற அந்த இடங்களை வேறு பணிகளுக்காக, அரசு நிருவாகத்திற்குப் பயன்படுத்துவதற்கும் வசதியாக இருக்கும் என்று ஏற்கெனவே துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***19044—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி நகரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பண்ருட்டி நகரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.